16

உ

சிவமயம்



யாழ் - பல்கலைக் கழக மருத்துவபீட மாணவி

## செல்வி

## ஹரிஹரசர்மா ஹம்சாநந்தினி

அவர்களின்

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY 16/11
JAFFNA

# நினைவு மலர்

13 - 7 - 1979

ஸ்ரீ லங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

2329

உ
சிவமயம்

திருநிறை செல்வி

# ஹ. ஹம்சாநந்தினி



தோற்றம்: 20-11-59 மறைவு: 13-7-79

## தீதீ வெண்பா

ஆண்டுசித் தார்த்திதனில் ஆனியிருபத் தொன்பால்
பூண்டநல் லபரபஞ்சமியில் - வேண்டியே
மாண்பாகும் அப்பரஸ ஹம்சா நந்தினி யான்
பூண்டாளே சிவன்றன் மகிழ்ந்து.

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

## திருநிறை செல்வி ஹம்ஸாநந்தினி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழத்திருநாட்டின் மேற்றிசையின்கண் அமைந்திருக்கும் ஈழத்துச் சிதம்பரம் என்னும் திருக்கோயில் கொண்ட நன்நகராம் காரைநகர்ப்பதியில் எழுந்தருளியுள்ள மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய அர்ச்சகராகவிருந்த, காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ச. நாகமுத்து ஐயர் அவர்களின் துதிய புத்திரன் ஹரிஹரசர்மா அவர்களுக்கும், சண்டிருப்பாயைப் பிறப்பிடமாகக்கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் பிரம்மஸ்ரீ ஐ. முத்துக்குமாரசுவாமிஐயர் அவர்களின் ஏகபுத்திரி தேவி புவனேஸ்வரிக்கும், அவர்கள் செய்த அருந்தவப் பயனாக விகாரி வருஷம் கார்த்திகை மாதம் 4-ஆம் திகதி (20-11-1959) வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தில் தலைமகளாம் நல்நங்கை செல்வி ஹம்சாநந்தினி ஜெனனமானார். அவரை அன்புடனும், பண்புடனும் அன்னையும் பிதாவும் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார்கள். அந்நாளில் இடையே ரமேஷ், ஹிமேஷ், சுரேஷ், நரேஷ், கீதா, ஹரிதாநந்தினி (ரமா) ஆகியோரைத் தன் பிற் சகோதரங்களாகக் கொண்டார்.

விளையும் பயிரை முளையிலேயே தெரியும் என்னுங் கூற்றிற்கிணங்க குழந்தைப் பராயத்திலிருந்தே சிறந்த அறிவாற்றலும், எதையும் துருவித் துருவி ஆராய்ந்தறியும் நுண்ணறிவும் கொண்டவராய்த் திகழ்ந்தார். எதற்கெடுத்தாலும் 'ஹம்சா, ஹம்சா' என்று அன்புடன் அனைவராலும் அழைக்கப்பட்ட அவர், தமது ஆரம்பக் கல்வியை யாழ்/பெருமாள் கோவிலடி சன்மார்க்க போதனா ஆங்கில வித்தியாசாலையிலும், யாழ்/பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றார். பின்னர் தமது தாயாரின் விருப்பத்தின் பேரில் அவர் கல்வி பயின்ற யாழ்/இந்து மகளிர் கல்லூரியில் எட்டாம் வகுப்பிற் சேர்ந்தார். எனினும் ஹம்சா பரமேஸ்வராக் கல்லூரியில் பயின்றகாலையில் அரச கல்விப் பணியகத்தால் நடாத்தப்படும் ஏழாம் வகுப்புகளுக்குரிய நவோதய புலமைப்பரிசிலைப் பெற்றமையால், இலங்கையின் முதலாந்தரக் கல்லூரிகளில் ஒன்றான யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் கல்விகற்கும் வாய்ப்பினைப் பெற்றார்; அவர் தங்கள் கல்லூரியை விட்டுப்பிற கல்லூரியில் சேர்வதை, அவர் மேற் கொண்ட பெருமதிப்பின் காரணமாக இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் உள்ளூரச் சிறிதும் விரும்பாவிடினும் அவருடைய முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு வாளாவிருந்தனர்; வேம்படி மகளிர் கல்லூரி

ஆசிரியர்களும் மாணவர்களும் வியக்கும் வண்ணம் வகுப்புகளில் முதலிடத்தைப் பெற்று விளங்கி, க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் கல்லூரியிலேயே முதல்தரமான பெறுபேறுகளைப் பெற்று வேம்படி மகளிர் கல்லூரிக்கு ஓர் அழியாப்புகழை ஈட்டித் தந்தார். தமது இளம்வயதிலேயே, யாழ் சைவபரிபாலன சபையினராலும், கொழும்பு விவேகானந்த சபையினராலும் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் சமயப் பரீட்சைகளில் தொடர்ச்சியாகப் பங்குபற்றி முதலாம் இடத்தில் சித்தியெய்தி வந்துள்ளார். இலங்கை ஆசிரியர் சங்கம் நடாத்தும் கட்டுரைப் போட்டிகளிலும் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் வேம்படி மகளிர் கல்லூரியில் பயின்றநாளையில், இலங்கை விஞ்ஞான அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்படும் விஞ்ஞான அறிவுப் போட்டிகளில் பங்குபற்றி கல்லூரிக்கு ஒரு நற்பெயரை ஈட்டித் தந்ததும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. குழந்தைப் பருவத்திலிருந்தே அனைவருடனும் அன்புடன் பழகும் நன்மையைக் கொண்டிருந்த அவர் தான் ஒரு சிறந்த சமூக சேவை செய்யும் தொழிலை ஏற்க வேண்டும் என்றே எண்ணியிருந்தார். அதற்கொரு சிறந்தவழி டாக்டர் தொழில்தான் என்றே கூறுவார். அவருடைய அபிலாஷையை அளிக்கும் வண்ணம் பெறுபேறுகளும் அமைந்தமையினால் அவர் வைத்தியத்துறையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பினைப் பெற்றார். பெற்றோர்களும் தம் மகள் டாக்டர் ஹம்சாவாகத் திகழ வேண்டுமென்றே விரும்பினார்கள். அவர்கள் அளித்த அன்பு நிறைந்த ஊக்கம், அவரை க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் முதல் வருட மாணவிகளுள் மிகவும் பாராட்டத்தக்க வகையில் பெறுபேறுகளை அளித்து இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கொழும்பு மருத்துவ பீடத்தில் சேரும் வாய்ப்பினைத் தந்தது. டாக்டராக வேண்டுமென்ற அன்னாரது ஊக்கத்திற்கும், அன்னையின் ஆசைக்கும் ஆக்கந்தர எண்ணிய தந்தை தான் வகித்த தபால் அதிபர் பதவியை உதறிவிட்டு பொருளீட்டும் நல்லெண்ணத்துடன் வெளிநாடு சென்றார். கணவன் கடல் கடந்து சென்றிருந்த வேளையில் மனங்கலங்கி நின்ற அன்னையவளுக்கும் தந்தையின்றித் தவித்த சகோதரர்களுக்கும் தலைமகள் என்ற நிலையில் மிகவும் உறுதுணையாக விருந்து கடமையாற்றினார்.

மிகுந்த ஆர்வத்துடன் பத்திரிகைகளையும், அறிஞர் வெளியீடுகளையும் விரும்பிப் படிக்கும் இவர், தான் ஒரு பெண்ணாகவிருந்தாலும் கிரிக்கட் விளையாட்டுத்துறையை மிகவும் விரும்பி வானொலியில் ஒலிபரப்பாகும் நேர்முக வர்ணனைகளைக் கேட்பார். பிறநாடுகளில் பல பேனா நண்பர்களையும் கொண்டிருந்தார்;

மணிலா நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் 'வெரித்தாஸ்' வானொலி தமிழ் நிகழ்ச்சியை மிகவும் விரும்பிக் கேட்கும் பழக்கமுடைய இவர் தன் நண்பர்கள் யாவருக்கும் அந் நிகழ்ச்சிகளைப் பற்றி விபரிப்பார். அவருடைய தூண்டுதலின் பலனாக அவருடைய நண்பர்கள் பலரும் வெரித்தாஸ் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கவாரம்பித்தார்கள். இந் நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரணக்கட்டுரையொன்றை ஈழநாடு பத்திரிகையில் எழுதியிருந்தார். அவருடைய அத்தகைய பணியைப் பாராட்டிய அவ்வானொலியினர் அவர் எழுதிய கட்டுரையையும் ஒலிபரப்பினார்கள். சமீபத்தில் இலங்கை வந்திருந்த வெரித்தாஸ் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் உயர்திரு மதலைமுத்து ஆரோக்கியசாமி அவரைச் சந்திக்க விரும்பி அவருடைய இல்லந்தேடி யாழ்ப்பாணம் வந்தார். இருப்பினும் அவரைச் சந்திக்க இயலாது போய்விட்டது.

இவ்வாறு தான் பழகும் அன்பர்களையும், நண்பர்களையும் தன்னுடைய நல்லெண்ணத்தினால் தன்பால் ஈர்க்கும் தன்மையைத் தன்னுள் கொண்டிருந்தார். கொழும்பு மருத்துவபீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஹம்சாநந்தினி அவர்கள் தமது பிறந்த ஊரிலேயே மருத்துவபீடம் உருவாவதையறிந்து அங்கு மாற்றம் பெற்றார். யாழ் பல்கலைக் கழக மருத்துவபீடத்தில் தமது வைத்தியப் படிப்பை ஆரம்பித்த அன்னார் சிறிது நாட்களிலேயே தமது அன்பினாலும், அறிவாற்றலினாலும், பெண்மைக்கேயுரித்தான அடக்ககுணத்தாலும் தன்னுடன் கற்கும் சக மாணவ மாணவியரையும், பேராசிரியர், விரிவுரையாளர்களையும் வசீகரித்துவிட்டார். இடையிடையே சுகயீனங் காரணமாக விரிவுரைகளுக்கு போகாமலிருந்தும், தன் முயற்சியினால் சக மாணக்கர்களிலும் பார்க்க கூடிய பெறுபேறுகளைப் பெற்று யாழ் பல்கலைக் கழக துணைவேந்தரின் நன்மதிப்பையும் பெற்றார். இவ்வாறு பல்கலைக் கழகத்தில் தனக்கென்று ஒரு நிலையான இடத்தை ஏற்படுத்தியிருந்தார். அவ்வாறு சிறந்து விளங்கி சகலராலும் மதிக்கப்பட்டிருந்த அவர் திருஷ்டிபட்டாற் போல் மீண்டும் நோய்வாய்ப்பட்டார். இந்நிலையில் தந்தை யாரும் தன்னோடு திரும்பினர். செல்வி ஹம்சாநந்தினி, தான் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதையிட்டுத் தன் தாய்தந்தையர் கவலை கொள்வதைக் கண்ணுற்று, தான் பிணி நீங்கி, நன்கு கற்று சிறந்த டாக்டராகி நாட்டுக்குச் சேவை செய்வேன் என்று உறுதியளித்து வந்தார். தான் வைத்தியசாலையில் இருந்த நாட்களில் வறிய நோயாளிகள் அனுபவிக்கும் இன்னல்களை அவதானித்து, தான் டாக்டராகி வந்ததும் பெறும் ஊதியத்தில் ஒரு பகுதியை இத்தகைய

வறிய நோயாளிகளுக்கு செலவு செய்ய வேண்டும் என்று கூறு வார். இவ்வாறெல்லாம் ஆறுதல் வார்த்தைகள் அளித்து வந்தபோதும் அவரது பிணி அவரை விட்டகலவில்லை. தன் அன்னை தன்னருகே அமர்ந்து தன்னினைக் கண்டு கலங்குகையில், "அம்மா! இறப்பு என்பது என்ன? அது ஒரு மனிதன் தனது பழைய சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டுப் புதிய சட்டை ஒன்றை அணிவது போன்றதே" என்று ஆறுதல் வார்த்தை கூறுவார். இவ்வாறு யாவருக்கும் ஆறுதல் வார்த்தைகள் கூறி வந்த ஹம்சாநந்தினி, மற்றவர்கள் நினைவுகளையெல்லாம் கன வாக்கிவிட்டு, ஆனி மாதம் 29-ஆம் நாள் வெள்ளிக்கிழமை (13-7-79) இரவு அன்னையவள் அருகிருந்து அவருக்கு ஆறு தல் வார்த்தைகள் அளித்து வர, அவருடன் அளவளாவிக் கொண்டே, வைத்தியசாலையில் அநித்தியமான இப்பூதவுடம்பை விட்டுப் புகழுடம்புடன் அனைவரையும் ஆருத்துயரத்தில் ஆழ்த்தி விட்டு தமது பத்தொன்பதாம் வயதில் இறைவன் திருவடியில் இணைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அவ னருள் புரிவானாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உ

"நாள் என ஒன்று போல் காட்டி உயிர் ஈரும்
வாள் அஃது உணர்வார்ப் பெறின்."

ஸ்ரீ ஹரிஹர சர்மா அவர்களது இல்லறச் செடியில் பூத்தமலர் செல்வி ஹம்சாநந்தினி. இம்மலர், கல்வி மணம் கமழும் வேளையில் அதன் திருமணம் கண்டு மகிழா வகையில் வாடிவிட்டது.

ஓதிடும் அழகு எல்லாம்
பேதுறும் தசையே யன்றிப் பிறிதில்லை.

ஓட்டைக் குடத்தில் விட்ட ஜலம் கொஞ்சம் கொஞ்சமாக ஓடி இறுதியில் குடம் வெற்றுக்குடமாகும். அதுபோல் நம் சடம் ஆகிய குடத்தில் ஒன்பது துவாரம். அதில் உயிராகிய ஜலம் எப்போதும் ஓடக் கூடியது. ஆன்மா என்றும் அழியாதது. அது கூட்டை மாற்றுவதே ஜனன, மரணம். உண்மை விளங்கினால், மயக்கம் இல்லை. செல்வி ஹம்சாநந்தினியின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திப்போம்.

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நல்லை ஆதீனம்
நல்லூர்.
17-7-79

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

# குரு உபதேசம்

இவ்வுலகையும் இவ்வுலகிலுள்ள பொருட்களையும் உன்னித்து நோக்குங்கால் இன்பமாகத் தோன்றி துன்பத்தில் ஒடுங்குவதைக் காணலாம். ஆதலால் இவ்வுலகில் துன்பவெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டு, கிடைக்கும் சொற்பமான இன்பத்தை அனுபவிக்கவே ஜீவாத்மாக்கள் முயற்சிக்கின்றன. இவைகளெல்லாம் துன்பமென்று நாம் திரும்பத்திரும்ப எண்ணினால் சொற்ப இன்பந்தான், உலகில் கிடைப்பது என்பதை எண்ணி, உணர்ந்து நாம் ஆறுதல்பெற முடியும். குழந்தையைப் பெறும்நாளும் துன்பந்தான் வளர்த்திடும் நாளும் துன்பம்தான். நடுக்கம் முதலிய நோய்கள் வந்தாலும் துன்பம். இளமைப் பருவமே துன்பமயம். இந் நிலையில் யமனே வந்து கைப்பற்றினால் அத் துன்பத்திற்கு எல்லையுண்டா? என்றைக்கும் குழந்தைகளால் பெற்றோருக்குத் துன்பம்தான். அங்ஙனமிருந்தாலும் இறந்த குழந்தையை எண்ணி எண்ணி வருந்தாது இருக்கும் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டும், நாமும் தெய்வபக்தியில் ஈடுபட்டு அவர்களையும் தெய்வவழி பாட்டில் ஈடுபடச் செய்து எல்லாம் சிவன் செயல் என்று எண்ணி நடுநிலையில் நின்று இனிமேல் நடக்க வேண்டியதை தர்மத்துடனும் நீதியுடனும் நடாத்தித் துன்பத்தை மறந்து ஆறுதல் அடைவோமாக.

மதலையைப் பெறும் நாள் துன்பம்
வளர்த்திடும் நாளும் துன்பம்
விதலை நோய் அடையின் துன்பம்
வியன் பருவத்தும் துன்பம்
கதமுறு காலர் வந்து கைப்பற்றில்
கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால்
என்றைக்கும் துன்பமானால்.

*கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்*

நல்லூர்
ஸ்ரீலங்கா.
19-7-79

## என்றும் எமதுள்ளத்தில் நிறைந்திருக்கும்
# செல்வி ஹம்சாநந்தினி ஹரிஹரசர்மா

இவ்வாண்டு நடைபெற்ற அபூர்வ நிகழ்ச்சிகளை நோக்கும் போது மனிதனுக்கு வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றுகின்றது. வருங்காலத்தை, செழிப்பாக, செவ்விய முறையிலே அனுபவிக்க வேண்டியவர்கள் திடீரென இளம் வயதிலேயே காலனால் எம்மிடமிருந்து பறிக்கப்படுகின்றனர். இத்தகையோருள் ஒருவரே செல்வி ஹம்சாநந்தினி ஆவர்.

இவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் அனுமதி பெற்ற போதும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வைத்திய பீடம் சிறப்பாக அமைந்ததையிட்டு இங்கு இடமாற்றம் பெற்று சக மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் நன்மதிப்பும் பெற்று படிப்பைத் தொடங்கினர்.

இவர் வருங்காலத்தில் சிறந்தவொரு வைத்திய நிபுணராகத் தோன்றுவார் என எதிர்பார்க்கப்பட்டது ஆனால் விதியின் சதியினால் ஒராண்டு முடிவதற்குள்ளேயே இவருடையவைத்தியப் படிப்பும் வாழ்க்கையும் முடிவுபெற்றன.

அடக்கமாக பெண்களுக்குரிய ஒழுக்கத்திற் சிறிதேனும் தவருது பல்கலைக்கழக வாழ்க்கை நடத்திவந்த செல்வி ஹம்சாநந்தினியின் எதிர்காலத்தைப் பெற்றோர்கள் மிகுந்த நம்பிக்கையுடனும் ஆவலுடனும் நோக்கியிருந்தனர்.

முளையிலேயே அவர்கள் அபிலாஷையும் நிறைவேற்றப்படாமல் சிதைந்து போனமை அவர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கும். அவர்களுக்கு நாம் என்ன ஆறுதல் கூறினும் தேற்ற முடியாது. காலந்தான் அவர்களுக்கு மன நிம்மதியை அளிக்கவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திய கடந்த சில மாதங்களில் இடம்பெற்ற அகால மரணங்களை எண்ணும்போது இறைவனின் சித்தத்தை எம்மால் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. அவற்றிற்கு எம்மால் பரிகாரமும் செய்யமுடியாது. எனினும், அவரின் மறைவினால் எமது பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பை அடைந்துள்ளது. இவர் நினைவு என்றும் எமது உள்ளத்தில் நிறைந்திருக்கும்.

அவருடைய பெற்றோர், உற்றார் அனைவருக்கும் பல்கலைக் கழகத்தின் சார்பில் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*பேராசிரியர் சு. வித்தியானந்தன்*
துணைவேந்தர்
இலங்கைப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

Faculty of Medicine,
University of Jaffna,
Kaithady.
20-7-79

Hamsanandini Hari Hara Sharma will be missed by the staff and students of the Faculty of Medicine. We were deeply impressed by the self effacing simplicity of her character and the quiet courage with which she carried on despite her failing health. What could have been a bright career has been extinguished so unexpectedly and it could take some time for us to get accustomed to this tragedy. We share fully deep loss felt by her parents and extend to them our deep felt sympathy.

Prof. A. A. Hoover
Dean, Faculty of Medicine

# நெஞ்சப் நிறைந்த நந்தினி

யாழ்ப்பாணம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ ஹரிஹர சர்மா அவர்கள் சிறந்த பரம்பரையில் வந்தவர்கள்; தெய்வ பக்தியுடன் திகழ்பவர்கள்; அம்பிகையிடத்தில் விசேட பக்தி உடையவர்கள். இவர்தம் தவப்பயன் விளைவாக மூத்த புதல்வியாகத் தோற்றியவர் செல்வி ஹம்ஸாநந்தினி. இவர் நற்குண நலன்கள் வாய்க்கப் பெற்றவர்; பழகுவதற்கு இனியவர். தந்தை வழிநின்று தாயின் அன்புப் பிணிப்பினுல் பிணைப்புண்டு இருவருக்கும் மகிழ்ச்சி பயக்கும் வகையில் சிறுபிராயம் முதல் தமக் கீடு இணை இல்லாதவாறு சிறப்புற வாய்க்கப் பெற்று விளங்கினுர். பாடசாலைக் கல்வியில் வகுப்புகளில் பாராட்டிற்குரிய திறமையை வெளிப்படுத்திக் கல்வி கற்றுப் பயிற்சிகளில் தேறி வந்ததோடமையாது பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புப் பரீட்சையிலும் முதன் முறையாகத் தோன்றிய அளவிலேயே சித்திபெற்றுப் பல்கலைக் கழகத்தில் மருத்துவப் பிரிவில் கல்விகற்பதற்குத் தகுதி வாய்ந்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கிடையில் நோய்வாய்ப்பட்டமையால் தொடர்ந்து சீராகக் கற்கும் சூழ்நிலை அமையாத இடத்தும், இரண்டு தவணைகளாக மருத்துவ பீடத்தில் கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இந்தும் விதி சதி செய்து விட்டது. பச்சிளம் பராயத்தில் எல்லோருடைய பாராட்டையும் நன்மதிப்பையும் பெற்ற செல்வி ஹம்ஸாநந்தினியைப் பெற்ருேரும் உற்ருேரும் மற்ருேரும் கலங்கிக் கதறும் வண்ணம் ஈவிரக்கமில்லாத காலன் கவர்ந்து சென்று விட்டான்.

செல்வி ஹம்ஸாநந்தினியின் நற்குண நலன்கள், எல்லோருடனும் கலகலப்பாகவும் அன்பாகவும் உரிமையுடனும் பழகும் பண்பு, கல்வியில் அசாதாரணத் திறமை, ஆகிய சிறந்த அமிசங்கள், நந்தினி நம்மை விட்டு அகன்ற இடத்தும், எம்மனத்தில் பசுமரத்தாணி எனப் பதிந்துவிட்டன. அவர் நினைவு எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

அவரது ஆன்மா சாந்தி யுற்று உயர்கதிப் பேற்றைப்பெற அம்பிகை திருவருள் பாலிப்பாராக.

கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்

இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
17-7-1979

# மலருமுன் மறைந்த மொட்டு

1978-ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்திலே புதிதாக மருத்துவபீடம் அமைக்கப்பட்டது. அப்பீடத்தின் முதல் மாணவர்களாக எழுபதின்மர் சேர்ந்து மருத்துவக் கல்வியை ஆரம்பித்தனர். யாழ்ப்பாணத்து மருத்துவபீடத்தில் அரும்பிய இளம் வைத்திய மொட்டுக்களுள் ஒன்றாக இடம் பெற்றார் திரு. நா. ஹரிஹர சர்மாவின் மூத்த புதல்வியாகிய ஹம்ஸாநந்தினி.

அறிவும் அழகும், அடக்கமும் ஆற்றலும் ஒருங்கே இடம் பெறுவது அரிதாகும். அத்தனை குணங்களையும் தன்னகத்தே கொண்ட இளநங்கையாக விளங்கினார் ஹம்ஸா. எந்நேரமும் நூலொடு பழகித் தன் நுண்ணறிவை வளர்த்த அவர், அறிவு வளர்ச்சியையே தன் முதற் பணியாகக் கொண்டிருந்தார்.

முதலில் பரமேஸ்வராக் கல்லூரியில் படித்துப் பின்னர் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலே தன் கல்வியைத் தொடர்ந்து பயின்ற ஹம்ஸா, ஏழாம் வகுப்புப் புலமைப் பரீட்சையிலே சிறப்புடன் சித்தியடைந்து, வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சென்றார். அங்கும் முன் போலவே திறமையுடன் கற்று, பொதுக்கல்வித் தராதரப் பரீட்சை (உயர் பிரிவு) யில் விஞ்ஞான பாடங்களிலே சிறப்புடன் சித்தியெய்தியதால், இலங்கைப் பல்கலைக் கழகத்துக் கொழும்பு வளாகத்தின் மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெற்றார். மருத்துவபீடத்துக்கு அனுமதி பெறுவது மிகவும் கஷ்டமானதாக அமைந்த ஒரு காலகட்டத்தில் அவர் அவ்வாறு அனுமதி பெற்றமை அவரது திறனை எடுத்துக் காட்டுவதாய் அமைந்தது. தனிப்பட்ட காரணங்களுக்காகக் கொழும்பு வளாகத்துக்குச் செல்லாது யாழ்ப்பாண வளாகத்திற்கு மாற்றலாகி வந்த ஹம்ஸா, இங்கு சிறந்த ஒரு மாணவியாகக் காணப்பட்டார். முதலாவது ஆண்டிலேயே மருத்துவ நூல்களை நன்கு வாசித்துத் தன் அறிவை வளர்ப்பதில் ஈடுபட்டார். அவருக்கு இருந்த ஆங்கில அறிவு, அவருடைய துறை சார்ந்த நூல்களை மட்டுமல்லாது, வேறும் துறை சார்ந்த நூல்களையும் வாசித்து முழுமை பெற உதவியது. நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில் இருந்த காலத்தில் ஜப்பானிய ஞானி ஒருவருடைய நூல்களை அவர் வாசித்து வந்தமை இதற்கு எடுத்துக்காட்டாகும்.

பிறர் சொல்வதைக் கிளிப்பிள்ளை போன்று படித்து அப்படியே பரீட்சைகளில் சமர்ப்பிக்கும் மாணவர்கள் நிறைந்த

இன்றைய சமுதாயத்தில் சுயசிந்தனையுடைய ஒரு மாணவியாக ஹம்ஸா காணப்பட்டார்.

இத்தகைய பண்புகளை இளமையிலேயே வெளிப்படுத்திய ஹம்ஸா ஒரு சிறந்த அறிவாளியாகவும் திறமையுடைய வைத்தியராகவும் விளங்கியிருப்பார். அவருடைய அகால மரணம் மிகவும் வருத்தத்துக்குரிய ஒன்றாக அமைந்துவிட்டது. பெற்றோர்கள் பெருமைப்படக்கூடிய வகையிலே வாழ்ந்தார். சகோதரர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாய் விளங்கினார். இன்று திடீரென அணைந்த விளக்காகி விட்டார்; மலருமுன் மறைந்த மொட்டாகி விட்டார்.

இந்நிலையில் அவரைப் பிரிந்து அல்லலுறும் தாய் தந்தையர், பாட்டனார், அருமைத் தம்பியரான ரமேஷ், ஹிமேஷ், சுரேஷ், நரேஷ் அன்புத் தங்கையர் ஆகியோருக்கு ஆறுதல் கூறுவது கஷ்டம். அவர்களுக்கு நாம் கூறக்கூடியது ஒன்றே தான்: வாழ்ந்த காலம் குறுகியது என்றாலும் அவர்கள் பெருமைப் படத்தக்க வகையிலும், பிறர் போற்றும் வகையிலும் ஹம்ஸா வாழ்ந்து தன் கடமைகளைச் சரியாகச் செய்தார். அதேபோல் அவர்களும் அவருக்குச் செய்ய வேண்டியவற்றைத் தவறாமற் செய்துள்ளனர். இனிக் கவலைப்பட வேண்டியதில்லை.

பேராசிரியர் கா. இந்திரபாலா

வரலாற்றுத்துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்.
17-7-1979

# எம்மை விட்டகன்றனையோ!

ஈழத்திருநாடு ஈன்ற நம் மருத்துவ பீடமதில்
ஆழமிகு நல்லறிவு பெற்றிடப் பெருமையுடன் புகுந்தனளே

புகுந்தநாள் முதல் மிகமலர்ந்த முகத்தினளாய்
வகுத்த கருமங்களனைத்தும் கண்ணெனக் கருத்தினிற்
கொண்டனளே

கருத்தின் தொன்மையினைக் கொண்டாங்கு கற்றதனாலோ
மருத்துவ வேதத்தினையும் வெட்கித்தலை குனியத்தலைப்
பட்டனையோ

தலைமகள் தன்னைத் தேற்றியே தீருவேனெனத் திடமாகக்
கூறிய தந்தையும்
விலைமிகு வெளிநாட்டு நற்பணியையும் உதறித்தள்ளினரே

தள்ளாத வயதினிலும் அயராது அரும்பணியாற்றி
மெள்ளவே தீரும் வியாதியெனத் தாத்தாவும் உறுதி
தளராதிருந்தாரே.

தளராத மனத்தினையும் தளரவைப்பேன் எனக்கொண்டோ
அன்றி
வளாகமதன் விதிக்கு விலக்காகக் கூடாதென்றே கொண்டனை
சபதம்

கொண்ட கடமை முடியுமுன்னே கூடியவரைப் பிரிதல் - ஈழம்
கண்ட மருத்துவக் கல்லூரிகள் பாரம்பரியமென உணர்த்தத்
தலைப்பட்டனையோ

உணர்வுகள் உறைந்தனவே உன் பிரிவின்
கணையொத்த செய்திதனைக் கேட்டதுமே.

கேட்டோர் மனம் நெகிழ வைத்தே - ஹம்சா நீ
வீட்டையடையவோ எம்மை விட்டகன்றாய்

விட்டகன்றவீடு வெறிச்சோடி விட்டாலும்
விண்ணவர்க்கினிய வைத்தியனாவாயோ, ஹம்சா!

ஹம்சா நல்லாள் நின் ஆத்மா சாந்தியடைய
எம் சாரமர்ந்தோர் சார்பில் கவிச்சரம் சாத்துகிறேன்,

*டாக்டர் பரமேஸ்வர ஐயர் அம்பிகாபதி*

**தலைவர்**
**உடற்கூற்றுத்துறை,**
**மருத்துவபீடம்,**
**யாழ் - பல்கலைக் கழகம்.**

# எங்கள் நீங்கா நினைவுகளிலே......

என்றென்றும் நிலைத்திருக்கும் ஹம்சா எம்மை விட்டு நீங்கி பதின்மூன்று நாட்கள் கடந்து விட்டதை நம்பத்தான் முடிய வில்லை. சென்ற வருடம் இந்நாட்களில் எங்கெங்கோ இருந்த நாம் ஆகஸ்ட் எட்டாம் திகதி கைதடி என்னும் முற்றிலும் புத்தம் புதிய இடத்தில் சந்தித்து ஒரு வருடம் கூட முடிய வில்லை. எனினும் காலவெள்ளம் எம்மனைவரையும் இவ்வளவு சீக்கிரத்தில் ஒன்ருகப் பிணைத்தது, ஒரு அதிசயம்தான், ஹம்சா கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து வந்தமை அவரை முதல் நாளிலேயே யாவருக்கும் அறிமுகமாக்கியது. விரிவுரைகளின் போது கிடைக்கும் ஓய்வு நேரங்களில் யாவருடனும் கதைத்து மெதுவாகச் சிரிப்பார். அச்சிரிப்பே மெல்லென விரிந்து மணம் பரப்பும் மனோரஞ்சிதம் போல் அச்சூழலையே மகிழ்ச்சியால் வியாபிக்க வைக்கும் தன்மையுடையதாக இருக்கும்.

உடற்கூற்றுத்துறை பிரேத பரிசோதனை தொடங்கிய பொழு திலேயே அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் எங்களில் சிலருக்குக் கிடைத்தது. ஒரு விரிவுரை மண்டபத்தைவிட ஒரே மேசையில் நின்று படிக்கும் போது ஒருவருடன் பழகும் சாத்தியக் கூறுகள் அதிகம் இருந்தமையால், அவரின் நுண்ணிய அறிவு, பாடங்களைக் கற்பதில் இருக்கும் ஆர்வம், தெளிந்த தீர்க்கமான சிந்தனைகள் என்பவற்றை நாம் அறிய முடிந்தது. அவர் பாடங் களில் மட்டுமல்ல பல்வேறு துறைகளிலும் மிக ஆர்வம் கொண் டிருந்தார் என்பதை விளையாட்டுத்துறை, இசைத்துறை, எழுத் துத்துறை என்னும் விடயங்கள் பற்றி கலந்துரையாடும் போது அவதானிக்க முடிந்தது.

அவர் இறுதி நாட்களில் மனம் தளர்ந்த நிலையில் இருப் பதாகக் கேள்விப்பட்டோம். ஆனால் அவரைச் சந்தித்தபோது அடுத்த வருட மாணவர்களுடன் சேர்ந்து படிக்கப் போவதாகக் கூறி தனது உடல்நிலை பற்றித்தானே விளக்கம் அளித்தார். அந் நாட்கள் அவர் மிகவும் அழகாக இருந்தார் என்பது எங்கள் யாவரின் அவதானமுமாகும். ஆனால் அது அணையப்போகும் விளக்கின் இறுதிப் பிரகாசம் என்பதை ஒருவர் தானும் அறி யாமற்போனமை அனுபவமின்மையோ என்னவோ! மூன்று நாட்களில் வளாகத்திற்கு வருவார் என்று இருந்த எங்களுக்கு இச்செய்தி மாபெரும் இடியாகும். எனினும் என் செய்வது? விரைவில் இறப்பவர்கள் அசாதாரண இயல்புகளுடன் பிறப் பார்கள் என்றறியதிக்கமைய அவர் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.

அவரின் ஆன்மா மலர் என்றென்றும் இறைவனின் பாதார விந்தங்களில் மலர்ந்திருக்க வேண்டி அஞ்சலி செய்கிரும்.

*யாழ்-பல்கலைக்கழக மருத்துவபீட*
*மாணவ மாணவிகள்*

இளமையிலேயே சருகாகி உதிர்ந்து விட்ட

யாழ்-பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி

**செல்வி ஹம்சாநந்தினியின் குடும்பத்தாருக்கு**

**யாழ் - பல்கலைக்கழக சகல மாணவர் சார்பிலும்**

வழங்கப்படும்

## அனுதாபச் செய்தி

"யாழ் - பல்கலைக் கழகத்தில் கடந்த ஆண்டு அனுமதி பெற்று ஒரு வருடகாலம் எங்களுள் ஒருவராய் இடம் பெற்று, இன்று எம்மை விட்டு இவ்வுலகையே விட்டுப் பிரிந்து சென்று விட்ட செல்வி ஹம்சாநந்தினி மீண்டும் ஒருமுறை இப்பல்கலைக் கழகத்தை துன்பசாகரத்தில் மூழ்கடிக்கச் செய்து விட்டார்.

இளமையில் மரணம் எங்கள் பல்கலைக் கழகத்துக்கே உரியது என்பதை நிரூபிப்பதுபோல், இருபது வயதிற்குள் எம்மை விட்டுப் பிரிந்து எங்களையும், அவர் குடும்பத்தார், உறவினரை யும் ஈடுசெய்ய முடியாத துயர வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டார்.

மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறையால் எங்கள் நாடும்; எங்கள் சமூகமும் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த வேளை யில், எதிர்காலத்தில் சுடர் விட்டுப் பிரகாசித்து நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் நற்சேவை ஆற்றவிருந்த இவர் இழப்பு, இந்த நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் பேரிழப்பானதாகும் என்று கூறினால் அது எந்த வகையிலும் மிகையாகாது.

அவர் பிரிவு எங்களைவிட அவர் குடும்பத்தாரை எந்தள விற்கு வாட்டும் என்பதை எங்களால் உணரமுடிகிறது. அவரை இழந்து தவிக்கும் பெற்றோருக்கும், உற்றோருக்கும் சகல பல்கலைக் கழக மாணவர் சார்பிலும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*யாழ்—பல்கலைக் கழக மாணவ அவை*

## மறப்போமோ நாம்?

நொந்த உளத்தோடு வெள்ளியன்று மாலைவரை
கிழமைகள் மூன்றில் முழு சுகமடைந்து
வந்திடுவேனென்று சொன்ன உந்தன்
வாக்கை மறந்தேகியது நீதியாமோ?
நைந்து நைந்து உருகுகின்றோம் அன்பான
அறுபத்து ஒன்பது பேர் நாங்களிங்கு.
முந்திவிட்டாய்? ஓராண்டுதானும் முடிவதற்குள்,
மின்னுமல் பேரிடியை தந்து பிரிந்ததேனோ?

அணைந்த எங்கள் அருமையான மணிவிளக்கே
ஆறுதலுரை யெமக் கீந்த தேனோ?
கணையை எமன் உன்மீது வீசுதற்கு
காத்திருப்பான் என்று யாரும் கருதவில்லையே!
உனை இழந்து உருகிநிற்கும் பெற்றோரின்
துன்பத்தை ஒருதரம் நீ கேட்டிட்டால்
அணை உடைத்த வெள்ளம்போல் அவர் முன்னே
ஓடிவரமாட்டாயோ உரைப்பாய் நீயே.

நோயினால் நலியும் நம்நாட்டவரின் நோய்தீர்க்க
"தெதஸ்கோப்பை" நீயும் ஏந்திடுவாய் என்றிருந்தோம்
ஆயிரம் எம் ஆசைகளை அணைத்துவிட்டு ஆண்டவனின்
நோய் தீர்க்க அங்குநீ சென்றனையோ
காயத்தில் கருத்தின்றி கல்வியதை காலமெல்லாம்
கருத்துடனே கற்றிட்டாய் "ஹரிசா"
காயாகி கனியாகி சேவை செய்வாய் என்றிருந்தோம்
பூவாகி வருவதற்குள் அரும்பினிலே உதிர்ந்துவிட்டாய்;

அன்பான கமலமுகம் மறப்போமோ நாம்?
அமைதியாய் பேசுவதை மறப்போமோ நாம்
பண்பாகப் பழகுவதை மறப்போமோ நாம்?
பாடங்கள் படிப்பதனை மறப்போமோ நாம்?
உன்போன்ற உத்தமி எம்மிடையே
இனி இல்லை என்பதனை மறப்போமோ நாம்?
வென்றுவிட்டான் எமனென்னும் பாவியெம்மை
விம்மிவிம்மி அழுகின்றோம் வெதும்புகின்றோம்.

*ச. பிரேமச்சந்திரன்*
யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடம்

மௌனமாய் உதிர்ந்த மலரானுள் - மிக
அமைதியாய் அணைந்த சுடரானுள்
இடையிலே நின்ற இசையானுள் - ஹம்ஸா
இணையிலா நினைவின் நிழலானுள்

காவிய வாழ்வை —
கனவாக்கி முடித்துவிட்ட
கவிதைப் பூங்கொடிக்கு
கண்ணீர் அஞ்சலிகள்



தோற்றம்: 20-11-59
மறைவு: 13-7-79

யாழ்-மருத்துவபீட மாணவி
**செல்வி ஹம்சாநந்தினி**
மறைவுக்கு
எமது அஞ்சலிகள்.

யாழ்-பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள்.

## கல்விக் களஞ்சியமே ஏன் பிரிந்தாய்?

கல்வித் திறமைமிக்க யாழ் - மருத்துவபீட மாணவி யான செல்வி ஹம்சாநந்தினியின் பிரிவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவு அவரது குடும்பத்திற்கும், தமிழ் சமுதாயத்திற்கும் பெரும் பேரிழப்பாகும். எத்தனையோ மனித உயிர் களைக் காப்பாற்றப் பிறந்த ஹம்சா அமைதியாய் அணைந்துவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*முதலாம் வருட*
*பல்வைத்திய பீட மாணவர்கள்*

பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.

**காலமகளின் வேகவெள்ளத்தில்**
**கலந்துவிட்ட ஹம்சாநந்தினியின்**
**கனவுகள்மீது தூவுகின்றோம்**
**கண்ணீர்ப்பூக்கள் பல.**



தோற்றம்: **20-11-59** மறைவு: 13-7-7[illegible]

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, மருத்துவபீட மாணவியான*

# ஹரிஹரசர்மா ஹம்சாநந்தினியின்

**மறைவையொட்டி மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் பெற்றோரினதும் உற்றோரினதும் கவலையில் நாமும் பங்கு கொள்கிறோம்.**

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்**

*யாழ்-பல்கலைக்கழக மாணவ அவை*

## என் கண்ணின் மணியே!

என் கண்ணே! ஹம்ஸா நந்தினி! உனது சிறிய தந்தையான நான் கூப்பிடுவது உன் காதில் விழவில்லையா! என்னைத்தான் விட்டுவிடு! உன் அருமைத் தாய் தந்தையரை துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டு என் கண்ணே! நீ எங்கே சென்றாயம்மா! உன் குலதெய்வமான காரை வாழ் மணற்காட்டு அம்பிகையைப் பார்க்க வருவாயென எண்ணியிருந்தேன். உன்னைப் பிரிந்த நான் அங்குபோய் இனி எங்ஙனம் நிம்மதியாக வாழப் போகின்றேன். என் பெருமகளே!

உன்னைத் தூக்கியெடுத்து, உனக்கு சிறுவயதில் வேண்டிய வற்றையெல்லாம் வாங்கிக் கொடுத்து, தாலாட்டிச் சீராட்டி, நீ எங்களுடன் சந்தோஷமாக இருப்பாயென்று எண்ணிய எங்கள் எண்ணத்தைப் பகற்கனவாக்கி விட்டு மறைந்துவிட்டாயே! நீ விரும்பிய நேரம் உன்னை சினிமா முதலிய இடங்களுக்கெல்லாம் கூட்டிச்சென்ற நான் உனக்கு விருப்பமில்லாவிடினும் உன்னை நிர்ப்பந்தம் செய்து நமது குலதெய்வத்தை வழிபடப்பண்ணி உன்னை நற்கதியடையச் செய்யத் தெரியாத மடையனாகி விட்டேனே!

உன் சகோதரர்களெல்லாம் மனம் குமுறிக் கதற அவர்களெல்லோரையும் விட்டுப் பிரிய உனக்கு எப்படியம்மா மனம் வந்தது? உன் மனமென்ன கல்லா, பாறையா? ஹம்ஸா! உன் தாத்தா கண்ணீர் வடிக்கின்றாரே அவருடைய இந்தத் தள்ளாத காலத்தில் கலங்கித் தளரும் மனதை யாரால் தேற்றமுடியும்? நீ வீட்டில் உலவித்திரிந்த காட்சியும், அங்கங்கு உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கும் காட்சியும் எங்கள் கண்களை விட்டு மறையமாட்டேன் என்கிறதே!

உனது ஆன்மா அம்பிகையின் திருவடி நீழலை யடையப் பிரார்த்திப்பதைத் தவிர சிறிய தந்தையான நான் வேறென்ன செய்ய முடியுமம்மா! என் கண்ணின் மணியே! இரவும் பகலும், பிறப்பும் இறப்பும், இன்பமும் துன்பமும், வாழ்வும் தாழ்வும் சமமெனக்கொள் என் மட நெஞ்சே!

ஓம் சாந்தி!

உன் அருமைச் சிறிய தந்தை
ஞானசம்பந்தக்குருக்கள்

# எங்கே சென்றனையோ?

கனகமணித் தொட்டிலிலே புன்னகைத்தநாள் கனவோ
கதைகூறி மழலையிலே சொக்கவைத்தநாள் கனவோ
மனமயங்கப் பாட்டில்அகம் குழைத்தநாள் கனவோ
மகிழ்வுடனே பள்ளிக்குச் சென்றதுதான் கனவோ!

ஹம்ஸநந் தினியென்று அழைத்ததுவும் கனவோ
கதிரொளிபோல் அறிவொளியை வீசியதும் கனவோ
அம்சத்தில் கலைமகள்போல் விளங்கியதும் கனவோ
ஆயிரத்தில் ஒருத்தியெனத் திகழ்ந்ததுவும் கனவோ!

மருத்துவத் துறையினிலே மாணவியாய்க் கற்றதுவும்
மாசற்ற தெய்வீக சிந்தனைகள் தோன்றியதும்
கருணையினால் கனிவோடு அனைவரையும் கவர்ந்ததையும்
காசினியில் உனைக்கண்டோர் மறப்பாரோ ஹம்ஸா!

காலையிற் பூங்கொடியில் பூத்த மணமலரே!
மாலையாயிற் றென்று மடிந்து கருகினையோ
வேலைமுடிந்த தென்று வேறெங்கோ சென்றனையோ
வேலைகளாய் உன்பிரிவின் வேதனைகள் குத்துதம்மா!

எங்குறினும் உந்தன் எண்ணம் மறக்காது
என்றும் மனத்தில் உன்உருவம் மறையாது
கங்குல் பகல்இரவு காலங்கள் மாறிவரும்
காற்றினிலே உன்பேச்சுக் கனிந்தெமது காதில்விழும்!

இறைவா!

ஏற்றிய தீபம் இங்கு ஏனணைந்தது?
எழுதிய நல் ஓவியமும் ஏனழிந்தது?

கொழும்பு:

அன்பு மாமா - அத்தை
சண்முகதாஸ்—சுசிலா

அன்னார் எழுதிய கட்டுரையொன்று

## கடவுள் வழிபாடு

கடவுளின் பெயரை வாய்மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாலும், பாடிக் கொண்டிருந்தாலும் ஈடேற முடியாது. கிராமபோன் பெட்டிகள் கடவுளைப் பாடுவதுபோல் அதுவும் பயன் இல்லாமல் முடியும். கடவுள் கோயிலில் மட்டும் இருக்கிறார் என்பது தவறு. கடவுள் எங்கும் எல்லாரிடத்திலும், எல்லா ஏழைகளிடத்திலும் இருப்பதாக நம்பிக்கை கொள்ளவேண்டும். உயிர்த்தொண்டை மறந்துவிட்டுக் கோயிலிலே அல்லது கடவுள் படத்தின் எதிரே நின்று கொண்டு அவரைப் புகழ்ந்து ஏத்துவது பெற்றோரின் வயிற்றை மறந்துவிட்டு அவர்களின் படத்துக்கு மட்டும் மாலை சூட்டித் 'தாயே, தந்தையே' என்று ஏத்துவது போலுள்ளது. நாட்டை ஆளும் தலைவன் தன் எதிரே குடிமக்கள் வந்து தன்னைப் புகழ்ந்து கொண்டிருப்பதை விரும்பாமல், தன் சட்டப்படி நல்ல முறையில் கடமைகளைச் செய்து வாழ்வதையே விரும்புகிறான். அதுபோல், கடவுளும் தன்னை எந்நேரமும் புகழ்ந்து பாடுவதை விரும்புவதில்லை. தான் வகுத்த அறநெறியில் வாழ்ந்து மற்ற உயிர்களிடம் அன்பு செலுத்தித் தொண்டு செய்வதையே கடவுள் ஏற்றுக்கொள்வார். படமாடுங் கோயில் பரமர்க்குத் தொண்டு செய்வதைவிட, நடமாடுங் கோயில் நம்மர்க்குத் தொண்டு செய்வது சிறந்ததென்று திருமூலநாயனார் சொல்லியிருக்கிறார். கோயில் வழிபாடு மனதை வளம்படுத்த ஒரு வழியே ஆகும். அதன் பயனை உயிர்த்தொண்டிலும், அன்பு வாழ்விலுமே காணவேண்டும். அதனாற்றான், திருநாவுக்கரசர் 'கங்கையாடில் என், காவிரி ஆடில் என், எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே' என்று ஈசனை எங்கும் காணுமாறு வற்புறுத்தினார், மனத்தூய்மை ஒன்றையே கடவுள் ஏற்றுக்கொள்வார். 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்' என்று தயங்காமல் சொல்கின்றவர்களே 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்று இறுமாக்க முடியும். திருநாவுக்கரசரின் உழவாரம், தொண்டு செய்து வாழும் வாழ்வின் உயர்வை உலகிற்குக் காட்டுகிறது. காந்தியடிகளின் ராட்டினமும் தொண்டுக்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டதே. அவர்களைப் போல அன்பை வளர்த்துத் தொண்டு செய்தால்தான் ஈடேற முடியும்.

## அண்ணா எழுதிய கட்டுரைகளிலிருந்து சில கருத்துகள்

1. கடவுளின் பெயரை வாய்மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாலும், பாடிக்கொண்டிருந்தாலும் ஈடேற முடியாது: கிராமபோன் பெட்டிகள் கடவுளைப் பாடுவது போல் அதுவும் பயன் இல்லாமல் முடியும்.

2. குழந்தை வளர்த்தல் பெண்களுக்கு வாழ்க்கை; ஆண்களுக்குப் பொழுதுபோக்கு.

3. கோயிற்படிகளில் காணும் பெயர்கள் பணங் கொடுத்துச் செதுக்கிய பெயர்கள். வீண் ஆசை. 'முருகா! உன்புகழைத் தவிர, வேறொன்றையும் எந்நாக்குப் பாடாது' என்று சொல்லி அவரவர்கள் பெயரையே செதுக்க ஆசைப்படுகிறார்கள்.

4. தற்கொலை என்பது கோழைத்தனமல்ல. வாழ்பவர்கள் தான் கோழைகள். சாவதற்குத் தைரியம் இல்லாததால் நான் மனிதன் இதயத்தைக் கொன்று ஈனவாழ்க்கை நடத்துகின்றான்.

5. வாழ்க்கையே ஒருவழிப் பயணம். எல்லோருக்கும் ஒவ்வொரு பாதை. ஆனால் இலக்கு ஒன்றே. போகும்வழி ஒன்றானால் வழித்துணை ஏற்படுகிறது. துணை எவ்வளவு நாளைக்கு? நாம் அவர்களை இழந்து விடுகின்றோம்; அல்லது அவர்கள் நம்மை இழந்து விடுகிறார்கள்.

## விநாயகர் வணக்கம்

கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பலஸார பக்ஷிதம்
உமா ஸுதம் சோகவினாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்

## துதிப்பாடல்கள்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே. 1

பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 2

மாசில் வீணையும் மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 3

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே. 4

மண்ணு லகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம். 5

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே. 6

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 7

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர். 8

படிகநிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அநவரதமுந் துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி. 9

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம். 10

மகாவிஷ்ணு ஸ்தோத்திரம்

சாந்தாகார புஜகசயநம் பத்மநாபம் ஸுரேசம்
விஸ்வாகாரம் ககநஸதருசம் மேகவர்ணம் சுபாங்கம்
லக்ஷ்மீ காந்தம் கமலநயனம் யோகிஹ்ருத்யா நகம்யம்
வந்தேவிஷ்ணும் பவபயஹரம் சர்வலோகைகநாதம்.

---

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

# வம்சாவளி

கல்யாண சுந்தரக் குருக்கள்
சிவசுப்பிரமணியக் குருக்கள்
நடராஜக் குருக்கள்
விஸ்வநாதக் குருக்கள்
காங்கேயக் குருக்கள்
ஆதிசிதம்பரக் குருக்கள்
குருசாமிக் குருக்கள்
குருசாமிக் குருக்கள்
மாணிக்கவாசகக் குருக்கள்
மங்களேஸ்வரக் குருக்கள்
சூரிய நாராயணக் குருக்கள்
கனக சபாபதிக் குருக்கள்
தாமோதர ஐயர்
கண்டோ பண்டித ஐயர்
முத்தையர்

- இராமசாமி ஐயர்
- குமாரசாமி ஐயர்
  - விஸ்வநாத ஐயர்
    - சுப்பிரமணிய ஐயர்
  - சிவானந்த ஐயர்
    - குமாரசாமி ஐயர்
      - அமிர்தேஸ்வர சர்மா
      - சோமாஸ்கந்த குருக்கள்
  - சதாசிவ ஐயர்
    - விஸ்வநாத ஐயர்
      - மகாதேவ சர்மா
        - சிவகுமார சர்மா
    - நாகமுத்து ஐயர்
      - கனகசபாபதி சர்மா
      - ஹரிஹர சர்மா
        தேவி புவனேஸ்வரி
        - ஹம்சாநந்தினி
        - ரமேஷ் சர்மா
        - ஹிமேஷ் சர்மா
        - சுரேஷ் சர்மா
        - நரேஷ் சர்மா
        - கீதா
        - ஹரிதாநந்தினி (ரமா)
      - பதுமநாப சர்மா
      - சோம சர்மா
      - ஞானசம்பந்த குருக்கள்
        - வாசுதேவன்
    - சபாரத்தின ஐயர்
- சீனி ஐயர்